பக்கங்கள் 13+6

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 01 ஞாயிற்றுக்கிழமை 14.04.2024 அதிர்வு 258

## கோர விபத்தில் 2 பெண்கள் பலி

### தந்தை, மகள் படுகாயம்

பதுளை – பண்டாரவளை பிரதான வீதியில் ஹாலி – எல பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள் ளனர்.

04▶

### தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கைக்கு

# பொது வேட்பாளர் காலத்தின் தேவை

## சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் வலியுறுத்தினார் சிறீதரன் எம்.பி.



தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கைக்குத் தமிழ்ப் பொது வேட்பாளர் காலத்தின் தேவை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் கைவிசேஷம் வழங்கி வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்படி விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழர்களின் தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் பல ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தோம். ஆனால், அவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை. ஆதரவளித்த பல பேர் தோல்வியடைந்தனர்.

04▶

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பற்றி வொஷிங்டனில் விசேட கலந்துரையாடல்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் வொஷிங்டனில் விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் நாளை உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மத்திய ஆண்டு மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

அதன்போது, நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான பயனுள்ள கலந்துரையாடலில் பங்கேற்கத் தயாராகவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு பல தரப்புகள் முன்னறிவித்தல் முஸ்தீபு

## புத்தாண்டுக்குப் பின் நெருக்கடிச் சூழல்




தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, கிராம அலுவலர் உள்ளிட்ட பல்வேறு அரச துறையை உள்ளடக்கிய தொழிற் சங்கங்களினால் இவ்வாறு வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன.

இந்த நிலையில், பல கோரிக்கை களை முன்வைத்து வேலை நிறுத்த போராட்டமொன்றை முன்னெடுக்கவுள் ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள முரண்பாட்டை தீர்த்தல், கல்விச் சுமையை பெற்றோர்களிடம் இருந்து அகற்றுதல், கற்றல் உபகர ணங்களின் விலையைக் குறைத்தல், ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்குத்தல் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

கல்வி அமைச்சு மற்றும் நிதி அமைச்சு இந்த கோரிக்கைகளுக்கான தீர்வை புதுவருடப் பிறப்பின் பின்னர் வழங்காத நிலையில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், ஆசிரியர்களின் தொழில் சார் மீளாய்வு நடவடிக்கைகளை எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டுமென இலங்கை ஆசி ரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு இல்லாத நிலையில் எதிர்வரும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை நிறைவடைந்ததும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள் ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுகாதார அமைச்சு உறுதிய ளித்தபடி, சுகாதார சங்கங்களின் கொடுப்பனவு பிரச்சினைக்கு தீர்வு காண சுற்றுநிருபம் வெளியிடப்பட வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாத நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங் கங்களின் கூட்டமைப்பு தெரிவித் துள்ளது.

இதனிடையே, அரசாங்கத்தின் அரிசி விநியோக வேலைத்திட்டம் உள்ளூர் அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளிக்காவிட்டால், கிராம உத்தியோகத்தர்கள் குறித்த வேலைத்திட்டத்திலிருந்து விலகிக்கொள் வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப் பிடப்படுகிறது.

மேலும், இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் நிலுவைத் தொகையை வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளித்துள்ள போதிலும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும், கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம் பிக்க வேண்டியிருக்கும் எனவும் அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளனர்.

# முந்தல் களப்பு பகுதியில் செத்து மிதக்கும் மீன்கள்



முந்தல் களப்பு பகுதியில் ஒக்சிஜன் பற்றாக்குறையினாலும், அடையாளம் கண்டறியமுடியாத இரசாயனம் கலக்கப்பட்டமை யினாலும் மீன்கள் அசாதாரணமான முறையில் உயிரிழந் திருக்கலாம் என தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் (யேசுயு) தெரிவித்துள்ளது.

முந்தல் களப்பு பகுதியில் வாழ்ந்த பல்வேறு இனங்களைச் சேர்ந்த மீன்கள் கடந்த 6ஆம் திகதி முதல் இறந்து கரையொ துங்க ஆரம்பித்தன.

இந்த நிலையில், மீன் இனங்கள் தவிர்ந்து அப்பகுதியில் வாழ்ந்த ஏனைய உயிரினங்களும் இறந்துள்ளன எனத் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமைத் துவ நிறுவனம் உறுதி செய்துள்ளது.

36 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள முந்தல் களப்பு பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

ஹமில்டன் கால்வாய் ஊடாக முந்தல் களப்பு நீர் புத்தளம் மற்றும் சிலாபம் களப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஹமில்டன் கால்வாய் முந்தல் களப்பு பல ஆண்டுகளாக சுத்தம் செய்யப்படாமல் இருப்பதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மீனவர்களின் குற்றச்சாட்டை தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் உறுதிசெய் துள்ளது. இதன்படி, களப்பு நீரில் ஒக்சிஜன் அளவு வெகுவாக குறைந்துள்ளதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், யாரேனும் மீன்களுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் அல்லது வேறு ஏதேனும் பொருளை களப்பில் விடுவித்துள்ளமை உறுதிப்படுத்தப் பட்டால், அவர்கள் மீது பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தளம் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் சரத் சந்திரநாயக்க தெரிவித்தார்.

# இலங்கைக்குப் போலிக் கடவுச்சீட்டுகளில் வர முயன்ற தம்பதியர் சென்னையில் கைது

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வர முயன்ற தம்பதியினர் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வியாழன் இரவு கொழும்பு வரவிருந்த விமானத்தில் ஏறவிருந்த பயணிகளின் பயண ஆவணங்களை குடிவரவு அதிகாரிகள் சோதனை செய்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரம்பலூரை சேர்ந்த ராமச்சந்திரன் அவரது மனைவி ஹனிஷா ஆகியோரின் கடவுச்சீட்டை சோதனை செய்த போது, இருவரும் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி பயணம் செய்ய முயன்றமை தெரியவந்தது.

விசாரணையில், இருவரும் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதையும், கடந்த சில ஆண்டுகளாக பெரம்பலூரில் தங்கி ரேஷன் அட்டை மற்றும் பிற இந்திய ஆவணங்களைப் பெற்றிருந்தமையையும் அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

சமீபத்தில் அவர்கள் இலங்கை செல்ல முடிவு செய்து பெரம்பலூர் முகவரியில் போலி கடவுச்சீட்டைப் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், அவர்களை விமான நிலையத்தில் தடுத்து நிறுத்திய குடிவரவுத் துறை அதிகாரிகள் விசாரணை செய்ததுடன், பின்னர் கைது செய்துள்ளனர்.



# கிண்ணியாவில் சிறு போக வேளாண்மை; பசளை இன்மையால் விவசாயிகள் கவலை!

(எச்.எம்.ஹலால்தீன் )

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நடு ஊற்று, வான்எல முதலான பகுதிகளில் தற்பொழுது சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதியில் சுமார் 150 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறு போக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலமாகியும் இதுவரைக்கும் அதற்கான பசளை வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கடந்த பெரும் போகத்தில் உரிய நேரத்துக்குப் பசளை வழங்கப்படாமையால் ஏற்பட்ட பாதிப்பைப் போன்று இந்த முறையும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க முன்கூட்டியே பசளையை அல்லது அதற்கான பணத்தை வழங்குமாறு விவசாயிகள் கேட்கின்றனர்.எனினும் இதுவரைக்கும் பசளையோ பணமோ வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல் விதைத்துப் பயிராகி சுமார் ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. எனினும் அதற்கான பசளைக்கான பணம் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

உரிய நேரத்துக்குப் பசளை அல்லது பணம் தராமையால் நாங்கள் நஷ்டத்தை அடைய வேண்டி இருக்கின்றது.

கடந்த முறையும் உரிய நேரத்தில் பசளை தராமையால் நஷ்டத்தை அடைந்து விட்டோம். இந்த முறையாவது உரிய நேரத்துக்கு தர வேண்டும்.

உரிய நேரத்தில் பசளை அடிக்காவிட்டால் லாபத்தை அடைய முடியாது. நாங்கள் விவசாயிகள் பாதிப்பை தான் எதிர் கொள்ள வேண்டி வரும்.

கடந்த பெரும்போகத்தில் ஒரு ஏக்கருக்கு 6000 ரூபா பணம் விவசாயிகளுக்குப் பசளைக்காக வழங்கப்பட்டது.

ஒரு ஹெட்டையருக்கு (இரண்டரை ஏக்கர்) 15000 ரூபா வழங்கப்பட்டது.

ஆனால் இந்த சிறு போகத்துக்கான பணமோ அல்லது பசளையோ வழங்குவதற்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை என கமநல சேவை திணைக்களத்தின் ஒருவர் தெரிவித்தார்.

காரணம் என்ன எனக் கேட்டபோது, சில விவசாயிகள் சிறுகுளத்தை நம்பி முன்கூட்டியே வேளாண்மை செய்கின்றார்கள்.

பெரும்பான்மை சிங்களவர்கள் பெரியகுளத்தை நம்பி வேளாண்மை செய்வதால் அவர்கள் செய்வதில் இருந்தே அதற்கான பணமோ, பசளையோ வழங்குகின்றார்கள்.

அதாவது சித்திரை புத்தாண்டு கழித்த பிறகு அவர்கள் பெரிய குளத்தின் நீர் பாசனத்தை நம்பி வேளாண்மை செய்வதால் அதற்கேற்பவே பணம் அல்லது பசளை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எது எவ்வாறாக இருந்தாலும் விவசாயிகளின் நலன் கருதி அவர்களுக்கு தேவையான பசளை அல்லது அதற்கான பணம் முன்கூட்டியே வழங்கினால் விவசாயிகளின் நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமையும்.- என்று தெரிவித்தனர்.

# ஒட்டமாவடி சிறுவர் பூங்காவில் இராட்டினம் உடைந்து விழுந்ததில் சிறுவன் படுகாயம்!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, ஓட்டமாவடியிலுள்ள சிறுவர் பூங்காவில் சிறுவர்கள் அமர்ந்து விளையாடும் சுழலும் இராட்டினம் உடைந்து விழுந்ததால் படுகாயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் பராமரிப்பில் கீழ் இயங்கி வரும் இந்தச் சிறுவர் பூங்காவில் நோன்புப் பெருநாளை யொட்டி பெரும் தொகையில் சிறுவர் பூங்காவில் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் சிறுவர்கள் கலந்துகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# புத்தாண்டு சிறப்பு வழிபாட்டுப் பூஜை

**(எஸ்.நிதர்ஷன்)**

குரோதி வருடம் நேற்று இரவு 8.17 மணிக்குப் பிறந்துள்ளது. இதையொட்டி இந்து ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திலும் புத்தாண்டு சிறப்பு வழிபாட்டுப் பூஜைகள் இடம்பெற்றன

ஆலயப் பிரதம குரு செ.ரமணிதரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரிகள் பூஜைகளை நடத்தி வைத்தனர். பல இடங்களில் இருந்து வருகை தந்த பெருமளவு பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு!

## துப்பாக்கிதாரிகள் தப்பியோட்டம்

மித்தெனிய உலஹிட்டியாவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று மித்தெனிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வீடு 'பம்பர' என அழைக்கப்படும் உள்ளூர் கஞ்சா வியாபாரிக்குச் சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் வீட்டில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீட்டின் தூண் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மித்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பிளாஸ்டிக் நீர்த்தாங்கி கவிழ்ந்து வீழ்ந்து மூன்றரை வயது சிறுமி பரிதாப மரணம்!

அரலகங்வில ருஹுனுகம பிரதேசத்தில் பிளாஸ்டிக் நீர்த்தாங்கி கவிழ்ந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சிறுமி கழிவறையில் உள்ள நீர்த்தாங்கியில் இருந்து பொருத்தப்பட்டிருந்த குழாயில் நீராடிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.சிறுமியின் உடலில் நீர்த் தாங்கி வீழ்ந்த நிலையில் பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

ருஹுனுகம பிரதேசத்தில் வசித்து வந்த 3 வயதும் 7 மாதங்களுமான சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பொலனறுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொதுவேட்பாளர்...**

வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் தமிழ் மக்களின் அரசியல் தீர்வைப் பெற்றுத்தரவில்லை. இதனால் தான் நீண்ட நெடும் அனுபவத்தின் அடிப்படையில் பெரும்பாலனவர்கள் மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான கருத்து நிலவி வருகின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழர்களுக்கு நீதி வேண்டும். சர்வதேச விசாரணை வேண்டும். தமிழர்களுக்கு இறையாண்மை வேண்டும்." – என்றார்.

கச்சதீவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சிறீதரன் எம்.பி.,

"இந்தியாவின் ஆளுகைக்குள் கச்சதீவு இருந்தாலும் ஒப்பந்தத்தில் கச்சதீவு இலங்கைக்குரியது. வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்கள் கச்சதீவில் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தமிழ் நாட்டில் இருக்கின்ற சகோதரர்கள் ஈழத்தின் தொப்புள் கொடி உறவுகளைப் பாதிக்க விடமாட்டார்கள். தமிழ் நாட்டில் நடைபெறும் தேர்தல் பிரசாரமே இந்தக் கச்சதீவு விவகாரம்." – என்றார்.

**கோர விபத்தில்...**

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை ஏற்றிச் சென்ற கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், தந்தை மற்றும் மகள் படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

70 மற்றும் 51 வயதுடைய இரு பெண்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் 53 வயதுடைய தந்தையும், 22 வயதுடைய மகளும் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி குடும்பத்தினர் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக ஹாலி – எல போகஹமடித்த பிரதேசத்தில் வசிக்கும் தமது உறவினரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

ஹாலி – எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ருவன் குணதிலக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அஷ்ஹரியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பின் 4 ஆவது ஆண்டு நிறைவு

**(சம்மாந்துறை)**

அஷ்ஹரியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பின் 4 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மேலங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று (13) தனியார் கல்வி நிறுவனமொன்றில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர் கலந்து கொண்டார்.

ஐ.கே.கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நளீம் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும் சட்டக் கல்லூரி மாணவனுமான ஹாதிக் இப்ராஹிம், அஷ்ஹரியன்ஸ் சமூக சேவை அமைப்பின் ஆலோசகர்களும் ஆசிரியர்களுமான சியாட், அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கடந்த 4 வருடங்களில் கடந்து வந்த பாதை என்ற அடிப்படை முன்மொழிவு ஒன்றை அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஹரீஸ் நிகழ்த்தியிருந்தார்.

தொடர்ந்தும் வருகை தந்திருந்த அதிதிகளினுடைய உரையில் அமைப்புக்கு பல ஆலோசனைகளையும் வழங்கி இருந்தனர்.

# மொழிகள் மற்றும் சமூக அபிவிருத்தி பயிற்சி நிலையம் சாவகச்சேரியில்





**(த.சுபேசன்)**

சூரிய நிறுவகம் அமைப்பால் இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து மனிதர்களாக ஒன்றிணைவோம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் மொழிகள் மற்றும் சமூக அபிவிருத்திப் பயிற்சி நிலையம் சாவகச்சேரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சூரிய நிறுவகம் அமைப்பின் வடக்கு மாகாண இணைப்பாளர் ரி.பிறேம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சூரிய நிறுவகம் அமைப்பின் இயக்குநர் ரஞ்சித் ஜெயதிலக, சூரிய நிறுவகத்தின் இணைப்பாளர்களான தெ.உதயரூபன், ஜானக, புஸ்பகுமார, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், டி.எம்.ஐ. நிறுவன இயக்குநர் மயூரன் மற்றும் ஆசிரியை வி.தர்ஜிகா ஆகியோர் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வில் சூரிய நிறுவகத் தின் பயிற்சி நிலையத்தில் இலவச சிங்கள கற்கைகளை பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமெரிக்காவே பொறுப்பு

சர்வதேச அபிப்பிராயங்கள், வலியுறுத்தல்கள், கோரிக்கைகள் எல்லாவற்றையும் உதாசீனம் செய்து, புறமொதுக்கிவிட்டு, கடந்த ஏழு, எட்டு மாதங்களாக பாலஸ்தீனத்தின் காஸா மீது கொடூரக் கொலை வெறித் தாக்குதலை - மனிதப் பேரழிவை - ஈவு இரக்கமின்றி நடத்திக் கொண்டிருந்த ஸியோனிஸ இஸ்ரவேலுக்கு இப்போது கெடுகாலம் தொடங்கிவிட்டது.

அதன் சண்டப் பிரசண்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் - அதனுடைய கொலை வெறியாட்டத்தை சகிக்க முடியாது - நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி இருக்கின்றது ஈரான்.

இஸ்ரேல் மீது ஈரான் தொடங்கி இருக்கும் தாக்குதல் மூன்றாம் உலக யுத்தம் வெடிப்பதற்கான பாதையைத் திறந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் என்ற பெயரில் இஸ்ரேல் ஆரம்பித்த கொலைவெறியாட்டத் தாக்குதல்கள் உச்சத்தைத் தொட்டன. குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட சுமார் நாற்பதாயிரம் பாலஸ்தீனியர்களைக் கொன்றொழித்து, பல நகரங்களைச் சிதைத்த இஸ்ரேல் அதன் ஒரு கட்டமாக கடந்த முதலாம் திகதி சிரியா தலைநகரில் அமைந்துள்ள ஈரானின் துணைத் தூதரகம் மீதும் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில் ஈரானின் முக்கிய தளபதி உள்ளிட்ட 13 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலை குற்றம் சுமத்திய ஈரான், இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தது.

இதன்படி, நேற்று இரவு இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை ஆரம்பித்தது.

ஈரானின் இந்தத் தாக்குதலுக்கு உலக வல்லரசு நாடுகள் கடும் கண்டனம் தெரிவிக்கின்றன.

ஈரான், ஈராக், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் இருந்து இஸ்ரேல் மீது ஏவப்பட்ட டசின் கணக்கான ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை அழிக்க அமெரிக்கா ஆதரவு அளித்து வருகின்றது.

இந்தப் பின்னணியில் ஈரானுடன் மோதலை விரும்பவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஒஸ்டின் ஒப்புக்குச்சப்பாணியாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எனினும், இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்ய அமெரிக்கா தயங்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காஸாவின் மீதான இஸ்ரேலின் கொடூரக் கொலைவெறித்தாக்குதல் மாதக் கணக்காகத் தீவிரமாகத் தொடர்கின்றமை, அதனால் மோசமடையும் மனிதப் பேரவலம் போன்றவை அனைத்துலக அளவில் அமெரிக்கா உட்பட்ட இஸ்ரேல் ஆதரவு சக்திகளுக்குப் பெரும் நெருக்கடி தரும் சர்வதேச கர்த்துருவாக்கமாக உயிர்ப்புப் பெற்றன. இவ்விடயத்தை ஒட்டி அமெரிக்காவில் உள்நாட்டில் தலைதூக்கியுள்ள கவலை தரும் அம்சங்கள், கிளர்ந்த எழுச்சிகள் போன்றவை இஸ்ரேலில் அடாவடித்தனத்துக்கு தான் ஆதரவல்ல என்று படம் காட்டும் கட்டாயத்தை அமெரிக்கத் தலைமைக்கு ஏற்படுத்தின.

காஸா விவகாரத்தில் இஸ்ரேல் தலைவர் பெரும் தவறிழைக்கின்றார் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பகிரங்கமாகக் கருத்து வெளியிட வேண்டியவரானார்.

காஸா மோதலை ஒட்டி ஐக்கிய நாடுகள் சபையில் அண்மையில் கொண்டுவரப் பட்ட தீர்மான விடயத்தில் இஸ்ரேலின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவிக்காமல் அமெரிக்கா ஒதுங்கியது. புனித ரமழான் மாதத்தில் இஸ்ரேல் - ஹமாஸ் போரை நிறுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு மன்றத்தின் நகல் தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் அமெரிக்கா கலந்துகொள்ளவில்லை.

அது, அமெரிக்காவின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பதாக நம்பப்பட்டது.

இறுதியில் அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல் அந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அமெரிக்காவின் அச்செயலை - தன்னைக் கைவிட்டமையை - இஸ்ரேல் சாடியது.

ஆனால் இப்போது இஸ்ரேல் மீதான குறி இறுகியதும் அந்த ஸியோனிஸ சக்தியைக் காப்பாற்ற விழுந்தடித்து - துடித்துப் பதறி - தானே நேரடியாகக் களத்தில் வந்து நின்று தானும் சேர்ந்து ஆட்டம் போடுகின்றது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த நீதி - நியாயம் பார்க்காத ஆதரவு இருக்கும் வரை இஸ்ரேல் பேயுருக் கொண்ட தனது கொலைவெறியாட்டத்தை நிறுத்தாது என்பது திண்ணம்.




# மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடு

(மன்னார் )

தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் ஆலயங்களில் விசேட வழிபாடுகளுடன் சிறப்பு அபிஷேக பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

இதற்கமைய வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் சோபகிருது வருடப்பிறப்பை முன்னிட்டு இன்று (14) காலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.





# சமய, சமூகப் பாரம்பரியங்களை பாதுகாப்பது கடமையாகிவிட்டது!

## சாளம்பங்கேணியில் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு





(மாளிகைக்காடு)

நவீன காலத்தில் புதுமைகள் புகுந்து பாரம்பரியங்கள் அழிந்துவரும் இந்த கால கட்டத்தில் சமய, சமூக, பாரம்பரியங்களைப் பாதுகாக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

பெருநாள் காலங்களில் பெருநாள் கொண்டாட்டங்கள் அழிந்து வருகின்றன. வழிபாடுகளில் ஈடுபட்டு, உண்டுவிட்டு தூங்கும் இளைஞர் சமுதாயத்துக்கு உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக பல்லின சமூக ஒற்றுமையை எடுத்துரைத்த எமது முன்னோர்களின் பெருநாள் கொண்டாட்டங்களைக் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறு அக்கரைப்பற்று பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சாளம்பங்கேணி அல் – குறைஷியா இளைஞர் கழகம் ஏற்பாடு செய்த நோன்புப் பெருநாள் விளையாட்டு மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அவர் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

முட்டி உடைத்தல், குண்டு போடுதல், சங்கீத கதிரை, முட்டை மாற்றுதல், மோட்டார் சைக்கிள் ஓட்டம், சுற்று ஓட்டம் எனப் பல சுவாரசிய விளையாட்டுக்கள் இதன் போது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.ஏ. லத்திப், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு உறுப்பினரும், கிழக்கின் கேடய பொதுச் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், கிழக்கின் கேடயம் தவிசாளர் தொழிலதிபர் ஏ.கே. அமீர், மத்திய முகாம் ஜீ.எம்.எம்.எஸ். பிரதியதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# கறுப்பு சித்திரை புத்தாண்டுடன் கல்முனை வடக்கு பிரதேச மக்கள்!

## மூவருக்கு நீதிமன்றத் தடை உத்தரவு!!

கல்முனைப் பிரதேச செயலகத்தின் நிர்வாக நடைமுறைகளுக்கு இடையீடு செய்ய வேண்டாம் எனவும் தங்களுக்கான அதிகாரங்களை சுயாதீனப்படுத்தக் கோரியும் தொடங்கப்பட்ட போராட்டத்தின் 21 ஆவது நாளான இன்று கறுப்பு சித்திரைப் புத்தாண்டு தினமாக மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடத்தப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இதுவரை எந்தவித தீர்வும் கிடைக்காத நிலையில் உள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கறுப்பு சித்திரைப் புது வருடமாக இந்தப் பிரதேச செயலகத்துக்குள் இருக்கும் ஸ்ரீ வர சித்தி விநாயகர் ஆலயத்தின் முன்பாக பொங்கல் இடம்பெற்றது.

அந்த இடத்தில் ஒருவர் மருத்து நீர் தேய்த்து நீராடியதோடு இது எங்களுடைய மத கடமை, அதனால் அதை நிறைவேற்றி இருக்கிறோம். இருந்தாலும் இது எங்களுக்குக் கறுப்புச் சித்திரை. அதனால் நாங்கள் அதைக் கொண்டாடப் போவதில்லை என்று கூறியிருந்தனர்.

அந்த இடத்துக்கு வருகை தந்திருந்த கல்முனை பொலிஸார் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த இளைஞர்களில் தாமோதரம் பிரதீவன், புஷ்பராஜ் துஷாநந்தன், அருள் ஞானமூர்த்தி டிலான்சன் ஆகிய மூவருக்கு நீதிமன்ற தடை உத்தரவை வழங்கினர். அத்துடன் அவர்கள் போராட்ட களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு இருந்தார்கள்.



அதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் கூடிய இளைஞர்கள் போக்குவரத்துக்கு எந்த இடையூறுகளும் இன்றி யாருக்கும் எந்த தொந்தரவுகளோ தொல்லைகளோ இன்றி மோட்டார் சைக்கிள்களிலே கறுப்பு ஆடைகள் கறுப்பு கொடிகளுடன் ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகி நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, துரைவந்தியமேடு, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ஊடாக கல்முனை ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்து மீண்டும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர்.

இதன்போது ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் தமிழர் கலாசார முறைப்படி பறை இசைத்து வரவேற்கப்பட்டனர். பிரதேச செயலகத்தின் முன்பாக அழைத்துவரப்பட்டு ஆலயத்திலே பூஜை வழிபாடுகளில் அனைவரும் ஈடுபட்டு அதனைத் தொடர்ந்து போராட்டம் தொடரப்பட்டது.







# விசேட தேவையுடைய குடும்பங்களுக்கு உதவி

(த.சுபேசன்)

சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் மனிதநேய செயற்பாட்டாளர் ஜொய்சி ஜெயபாலன் என்பவர் பிரீத்தி பவுண்டேசன் ஊடாக யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்துக்கு வழங்கிய நிதியுதவியில் விசேட தேவையுடைய 12 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது காரைநகர், சாவகச்சேரி, உடுவில் மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் வசிக்கும் விசேட தேவையுடைய 12 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தில் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து இவ்வாறான மனிதநேய செயற்பாட்டை முன்னெடுத்த மனிதநேய செயற்பாட்டாளருக்கு கே.கே.பி. இளைஞர் கழகத்தினர் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# தேசிய மட்டக் கணித ஒலிம்பியாட்டுக்கு கல்முனை மஹ்மூத் மாணவிகள் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இம்முறை இடம்பெற்ற கிழக்கு மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் பங்கேற்று கல்முனை வலயக் கல்விப் பணிமனை சார்பாக தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் ஆறு பிரிவைச் சேர்ந்த எம்.ஜே. அமீஹா ஷாஹ்தா, எம்.சி. ஆர். ஜீஸா றீம் ஆகியோர் மாகாண மட்ட போட்டியில் வெற்றி பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் இடம்பெறவுள்ள தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று கல்லூரி அதிபர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் தெரிவித்தார்.



# உள்ளூராட்சி உத்தியோகத்தருக்கு ஆவணத் திருத்தப் பயிற்சிப் பட்டறை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கண்டி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான ஆவண திருத்த நடைமுறைகள் தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட அடையாளத்துக்கான திருத்தங்களை மேம்படுத்துதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு எஸ்.டி.ஜே.எவ். அமெரிக்க தூதரகம் இலங்கையின் கூட்டாண்மையுடன் இலங்கையின் அமெரிக்க தூதரகத்தின் அனுசணையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சமூகத்தின் தனிப்பட்ட நிகழ்வுகள் மற்றும் தேசிய அளவிலான மாற்றங்கள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.






# யாழ். நகரின் சுகாதார நிலைமை; நேரடியாக அவதானித்த டக்ளஸ்!

யாழ்ப்பாண நகரப் பகுதியின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் அவதானிப்பதற்காக கண்காணிப்பு விஜயம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

புது வருடப் பிறப்பு தினமான இன்று (14) காலை இந்த களஆய்வு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண நகரின் தூய்மை பராமரிப்பு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் பலதரப் பட்டவர்களிடம் இருந்து முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் கள விஜயம் அமைந்துள்ளது.

யாழ். நகரின் மையப் பகுதி மற்றும் புதிய மாநகர சபைக் கட்டட வளாகம் அதனை அண்டிய சுற்று வட்டத்தின் நீர் வடிந்தோடும் வடிகால்கள் ஆகியவற்றைப் பார்வை யிட்டஅமைச்சர் அவற்றைத் தூய்மையாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.





# கடலரிப்பால் பாதிக்கப்பட்டுவரும் சாய்ந்தமருது மருதூர் சதுக்கம்!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருதில் கடலரிப்பின் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளதால் இந்தப் பிரதேச மக்கள் பொழுது போக்குக்காக ஒன்றுகூடும் மருதூர் சதுக்கம் என்று அழைக்கப்படும் கடற்கரை திடல் அதிக பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

இந்த சதுக்கத்தோடு இணைந்ததாக காணப்படும் கொங்றீட் வீதியின் ஒரு பகுதி கடலுக்குள் உள்வாங்கப்படுள்ளது. இவ்விடத்தில் அமைந்துள்ள மீனவர் பல்தேவை கட்டடமும் இடிந்துவிழும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்பட்டபோது கல் அணைகள் அமைக்கப்பட்டபோதும் இந்த பிரதே சத்தை அண்டியதாக கடலரிப்பு பாது காப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படாமையால் மருதூர் சதுக்கம் கடலரிப் புக்குள்ளாகியுள்ளது.

எனவே, தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு மருதூர் சதுக்கம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங் களை பாதுகாக்க கரையோரம் பேணல் திணைக்களம், பிரதேச செயலகம் என்பன இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இது தொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள் கவனத்தில் எடுத்து கல் அணை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசங்களில் கல் அணை அமைத்து எஞ்சியிருக்கும் கற்களைப் போட்டு முதற்கட்ட ஏற்பாடுகளை என்றாலும் செய்ய முயற்சிக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# சம்மாந்துறையில் 2030 இல் யாவருக்கும் உறையுள் திட்டம்

(நூருல் ஹுதா உமர் )

சம்மாந்துறை பிரதேசத்தில் வசிக்கும் தேவையுடைய குடும்பங்களின் உறையுள் தேவைக்காக ஓ.சி.டீ. அமைப்பின் தலைவரின் எண்ணக் கருவில் உருவான "யாவருக்கும் உறையுள் - 2030" எனும் தொனிப்பொருளில் நிர்மானிக்கப்படவுள்ள 13 ஆவது வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று சனிக்கிழமை (13) மலையடிக்கிராமம் 4 அல்-அக்ஷா பள்ளிவாசல் மஹல்லாவுக்கு உட்பட்ட பகுதியில் அமைப்பின் செயலாளர் சரோஸ் தலைமையில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் அஸ்மி யாஸீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து அடிக்கல் நட்டு வைத்தார்.



இந்த நிகழ்வில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதம பொறியியலாளர் நஸீர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் றியாஸ், தொழிநுட்ப உத்தியோகத்தர் மொஹம்மட் தம்பி, நூர் பள்ளிவாசல் தலைவரும், அமைப்பின் ஆலோசகருமான அல்-ஹாபிழ் றிப்கான், சம்ஃமத்திய கல்லூரியின் உப அதிபர் பர்ஸான், கணக்காளர் ஜிப்ரி, அஸ்ஸமா வித்தியாலய அதிபர் அபூபக்கர், ஜனாதிபதியின் இளைஞர் விவகார அமைப்பின் உறுப்பினர் பாஸித், ஓ.சி.டீ. அமைப்பின் செயலாளர் பெரோஸ் மற்றும் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 75 போதைப் பொருள் மாத்திரைகளை விழுங்கிக் கடத்த முயன்ற பெண் கைது!

## அதன் மதிப்பு 35 மில்லியன் ரூபா!!

போதை மாத்திரைகளை உட்கொண்டு அவற்றைக் கடத்த முயன்ற வெளிநாட்டுப் பெண் ஒருவரை இலங்கை சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 38 வயதான மடகாஸ்கர் நாட்டை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் சுமார் 75 கொக்கைன் எனப்படும் போதைப் பொருள் பக்கெற்றுக்களை விழுங்கியிருந்தார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதன் மதிப்பு சுமார் 35 மில்லியன் ரூபா ஆகும். கொக்கைன் எனப்படும் போதைப் பொருளை மாத்திரைகள் வடிவில் சிறு பொதிகளாகச் சுற்றி விழுங்கியுள்ளார்.

இதனை அடுத்து அவர் விழுங்கிய போதைப் பொருள் மாத்திரைகளை எடுப்பதற்காக நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் உடலில் இருந்து விழுங்கப்பட்ட போதைப் பொருள் மாத்திரைகள் எடுக்கப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைக்காக அவர் இலங்கை சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கச்சதீவு விடயத்தில் காங்கிரஸை விமர்சிக்கும் பா.ஜ.க. சீனாவின் நில ஆக்கிரமிப்பு குறித்து ஏன் பேசுவதில்லை!

## தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் கேள்வி?



"கச்சதீவு விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியை விமர்சிக்கும் பாரதிய ஜனதா கட்சி, சீனாவின் நில ஆக்கிரமிப்பு குறித்து ஏன் பேசுவதில்லை."

– இவ்வாறு தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவார் கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவின் சில பகுதிகளில் சீனாவின் அத்துமீறல் குறித்த கேள்விகளுக்கு பிரதமர் மோடி பதில் அளிக்க வேண்டும். நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகள் குறித்து அவர் என்ன நடவடிக்கை எடுத்தார்." – என்றார்.

முன்னதாக, 1974 இல் அப்போதைய மத்திய அரசு கச்சதீவை 'இந்தோ – இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின்' கீழ் இலங்கையின் எல்லையாக ஏற்றுக்கொண்டது.

எனினும் கச்சதீவு விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியையும் திராவிட முன்னேற்ற கழகத்தையும் பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.






# தமிழகத்தில் பலத்த பாதுகாப்பு: தீவிரமடையும் தேர்தல் களம்

தமிழகத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆந்திரா, கேரளா, தெலுங்கானா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உள்ள 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகத்தில் களமிறங்கவுள்ளனர்.

மக்களைவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், அரசியல் கட்சிகளும் தீவிர பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

# நடிகர் சல்மான் கான் வீட்டிற்கு அருகே துப்பாக்கிச் சூடு; மும்பையில் பரபரப்பு

பொலிவுட்டின் முன்னணி நடிகராக உள்ள சல்மான் கான் வீட்டின் முன் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி துப்பாக்கிச் சம்பவம் இன்று அதிகாலை மும்பை பாந்த்ராவில் அமைந்துள்ள வீட்டின் முன்னால் இடம் பெற்றுள்ளது.

இன்று அதிகாலை இவரது வீட்டு முன்னால் மோட்டார் சைக்களில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் வானத்தை நோக்கி 4 முறை சுட்டுள்ளனர்.

சத்தம் கேட்டு உடனடியாக வீட்டில் இருந்த காவலாளிகள் வெளியே வந்து பார்த்தபோது அந்த நபர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக



மும்பை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த சம்பவம் பொலிவுட் திரையுலகில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.





# இஸ்ரேலுக்கு எதிராக ஈரானின் தாக்குதலை உடன் நிறுத்தும்படி அமெரிக்கா எச்சரிக்கை

இஸ்ரேலுக்கு எதிராக ஈரானினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதற்கு ஏற்றவகையில் இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு பூரண ஆதரவினை அமெரிக்கா வழங்கும் என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் மோதுவதை அமெரிக்கா விரும்பாத போதிலும் தமக்கு சார்பாக செயற்படும் நட்பு நாடுகளின் பாதுகாப்பு, இஸ்ரேலின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை குறித்து அமெரிக்கா அதிக சிரத்தை கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் இஸ்ரேல் மீது 300 இற்கும் அதிகமான ஆளில்லா வானூர்தி தாக்குதல்கள் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை ஈராக் ஏவியுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு பேச்சாளர் டனியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

அவற்றில் பெரும்பாலானவற்றை இஸ்ரேலிய இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், யேமனில் இருந்தும் சில ஏவப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் மற்றும் ஹெஸ்புல்லா போன்ற ஆயுத குழுக்களுக்காக பல வருடங்களாக பல வழிகளிலும் தாக்குதல்களை மேற்கொண்டு வந்த ஈரான், தற்போது நேரடியாக இஸ்ரேலை தாக்குவது இதுவே முதல்முறையாகும்.

ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு அமையவே ஈரான் தற்போது செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இஸ்ரேலின் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் தமது தாக்குதல்கள் பாரிய அளவில் விஸ்தரிக்கப்படும் என எச்சரித்துள்ளது.

அதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை இன்று அவசர கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல்கள் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல்: முக்கிய அதிகாரிகளுடன் பைடன் சந்திப்பு

ஈரானின் தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிற்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பைடன் தனது முக்கிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடும் படத்தை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

இரண்டு மணித்தியாலங்களிற்கு மேல் பைடன் தனது முக்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

“ஈரானிடமிருந்தும் அவர்களின் சகாக்களிடமிருந்தும் இஸ்ரேல் எதிர்கொள்ளும் ஆபத்திலிருந்து அந்த நாட்டை பாதுகாக்கும் எங்கள் உறுதிப்பாடு மிகவும் வலுவானது“ என பைடன் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈரானின் தாக்குதல்களுக்கு எதிராக இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு அமெரிக்க ஆதரவு வழங்கும் என்று பைடன் உறுதியளித்தார்.

பக்கங்கள் 06

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 14/04/2024

## மத்திய கிழக்கு சூழ்நிலை பற்றி ட்ரூடோவுக்கு விளக்கமளிப்பு!

இஸ்ரேல் தமது ஆகாயவழிப் பாதையை மூடுவதாக அறிவித்தமையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலை தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ C2



# இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதல்; கண்டிக்கின்றார் கனடாப் பிரதமர்!

ஒன்ராரியோ,ஏப்ரல்14

இஸ்ரேல் மீது ஈரான் நடத்தியுள்ள தாக்குதல்களை கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கண்டித்துள்ளார்.

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் முன்னெடுத்த தாக்குதல்களுக்கு ஆதரவு தெரிவித்திருந்த ஈரான், தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பிராந்தியத்தின் நீடித்த சமாதானத்தினை ஸ்திரமற்றதாக்கும் என இது தொடர்பில் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிராந்தியத்தில் சமாதானம் நிலவுவதில் ஈரானின் அக்கறையற்ற தன்மையை இந்த தாக்குதல் வெளிப்படுத்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாட்டையும், நாட்டு மக்களையும் இவ்வாறான தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் இஸ்ரேலின் உரிமையை கனடா ஆதரிப்பதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.




## நேற்றைய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்14

கிளாரிங்டன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று ஏப்ரல் 13ஆம் திகதி பிற்பகல் 2.15 அளவில் மொஸ்போர்ட் மற்றும் வில்மன்ட் வீதிகளுக்கு இடையில் ரீஜினல் ரோட் 20 பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான வாகனத்தில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், விபத்துக்கான காரணம் எதுவென தெரிவிக்கப்படவில்லை.



# கியூபெக் அரசுடனான உடன்படிக்கையை தொழிற்சங்க உறுப்பினர்கள் நிராகரிப்பு!

கியூபெக்,ஏப்ரல்14

கியூபெக்கில் 80,000இற்கும் அதிகமான சுகாதாரப் பணியாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்கமானது, மாகாண அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மறுத்துள்ளது.

கியூபெக் அரசாங்கத்திற்கும், தொழிற்சங்கத்திற்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பில் தொழிற்சங்க உறுப்பினர்களிடத்தே நடத்தப்பட்ட இணைய வாக்கெடுப்பில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் எனத் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 12ஆம் திகதி இரவு வரை இடம்பெற்ற இந்த வாக்கெடுப்பில் 77 சதவீதமான தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முடிவுகள் தொடர்பில் தாம் ஏமாற்றமடைந்துள்ளார் எனத் தொழிற்சங்கத் தலைவர் ஜூலி புக்கார்ட் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உடன்படிக்கையை தொழிற்சங்க உறுப்பினர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு மீள்பேச்சுவார்த்தைக்கு உள்ளாக்குவதற்கு தாம் முயற்சிக்கப் போகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# வென்கூவரில் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்14

வென்கூவரின் தென்பகுதியில் நேற்று முன்தினம் ஏப்ரல் 12ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் 12ஆம் திகதி இரவு 11 மணியளவில் ஈஸ்ட் 55 அவனியு மற்றும் மெய்ன் ஸ்ட்ரீட் அருகில் வாகனம் ஒன்றிலிருந்து 24 வயதான சிராக் அன்டில் என்பவரின் உடலை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் குறித்து அயலவர்கள் பொலிஸாருக்கு எடுத்த அழைப்பின் பேரிலேயே இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.



இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## மத்திய கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிற்குள் சில இலக்கு வைக்கப்பட்ட பகுதிகள் மீது ஏவுகணை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதாக ஈரானின் அரச செய்தி நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கு சூழ்நிலைகள் தொடர்பில் கனடிய அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரதமரின் பேச்சாளரான ஏன்–கிளாரா வெய்லன்கோட் எக்ஸ் என்ற சமூகத் தளத்தில் தெரிவித்துள்ளார்.

மேலதிக தாக்குதல்கள் ஏற்படலாம் என்ற அச்சுறுத்தலின் தமது விமானப் போக்குவரத்து வழியை மூடுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.சிரியாவில் அமைந்துள்ள ஈரானிய தூதரகத்தின் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தியதாக குற்றம்சுமத்தப் பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையிலான பதற்ற நிலை அதிகரித்தது.





# இஸ்ரேல், மேற்குக்கரைக்குச் செல்வதை தவிர்க்க கனடியர்களுக்கு ஆலோசனை!

ஒன்ராரியோ,ஏப்ரல்14

கனடியர்கள் இஸ்ரேல் மற்றும் மேற்குக்கரைக்குச் செல்வதனை தவிர்க்க வேண்டும் என கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது தாக்குதல் இடம்பெறுவதற்கான ஆபத்துகள் அதிகரித்துள்ளன எனவும், மேற்குக்கரையில் பதற்றமும், வன்முறையும் தீவிரமடைந்துள்ளன எனவும், இதனாலேய இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலைமை மிகவும் பலவீனமாக இருப்பதாகவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் வன்முறை அதிகரிக்கலாம் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜொலி கூறியுள்ளார்.

இஸ்ரேலில் உள்ளவர்கள் வர்த்தக மார்க்கங்களைப் பயன்படுத்தி உடனே வெளியேற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஒன்ராரியோ மாகாணத்தில் அரைவாசிப் பேர் கார்பன் வரி நீக்கத்தை வலியுறுத்துகின்றனர்

ஒன்ராரியோ,ஏப்ரல்14

ஒன்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்த சுமார் அரைவாசியானோர் கார்பன் வரி நீக்கப்பட வேண்டும் என கருதுகின்றனர் என புதிய ஆய்வு ஒன்றின் முடிவுகள் தெரிவித்துள்ளன.

ஒன்ராரியோவில் வசிக்கும் சுமார் 1,280 பேரிடம் நடத்தப்பட்ட இந்த கற்கையில், 49 சதவீதமானோர் கார்பன் வரி நீக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அதேவேளை, 27 சதவீதமானோர் கார்பன் வரி அவசியம் என வலியுறுத்தியுள்ளனர்.

வருடாந்த அதிகரிப்பின் ஓர் அங்கமாக, கார்பன் மாசு தொடர்பான வரியானது ஏப்ரல் முதலாம் திகதி முதல் தொன் ஒன்றிற்கு 15 டொலர்களால் அதிகரிக்கப்பட்டது.

பச்சைவீட்டு வாயுக்ககளின் வெளியேற்றத்தை குறைப்பதாக இந்த கொள்கையின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

எவ்வாறாயினும், கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண முதல்வர்களும் நீண்டகாலமாக கார்பன் வரிக்கு எதிராக குரலெழுப்பி வருகின்ற நிலையில், ஆளும் கட்சியுடன் பங்காளிகளாக ஆட்சி செய்து வரும் புதிய ஜனநாயகக் கட்சியினரும் கார்பன் வரிக்கு எதிரான நிலைப்பாட்டை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மெக்னப் பூங்காச் சண்டையில் 16வயது இளைஞர் ஒருவர் சாவு

ஒன்ராரியோ,ஏப்ரல்14

ஒட்டாவாவின் மெக்னப் பூங்காவில் இடம்பெற்ற சண்டையில் 16 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

புறொன்சன் மற்றும் கிளட்ஸ்டோன் வீதிகளுக்கு அருகில் நேற்று முன்தினம் ஏப்ரல் 12ஆம் திகதி மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் இந்த இளைஞர் கடும் காயங்களுக்கு உள்ளாகி, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.எனவே, இந்த சம்பவம் தொடர்பில் விவரங்கள் தெரிந்தவர்களை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.



# பிறம்டனில் வீடு புகுந்து கொள்ளை; மூன்றாவது சந்தேக நபரும் கைது!

ஒன்ராரியோ,ஏப்ரல்14

பிறம்டன் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் வீட்டிற்குள் புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் மூன்றாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு சந்தேகநபர்கள் நவம்பர் 25ஆம் திகதி சென்டல்வூட் பார்க்வே வெஸ்ட் மற்றும் மெக்லோஹ்லின் வீதியில் உள்ள வீட்டிற்குள் புகுந்து அச்சுறுத்தில பணம் மற்றும் உடைமைகளை கோரியுள்ளனர்.

இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வீட்டில் இருந்த ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளானர்.

எனினும், சந்தேகநபர்கள் பெருந்தொகை பணம் மற்றும் பெறுமதி மிக்க பொருள்களை சூறையாடிக் கொண்டு தப்பிச் சென்றனர். கடந்த மாதத்தில் இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் அறிவித்திருந்தனர். நேற்று ஏப்ரல் 13ஆம் திகதி மூன்றாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பீல் பிராந்திய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்


## GUNAAM'S SUPER MARKET

GSM குணம்ஸ் சுப்பர்மார்க்கட் GUNAAM SUPERMARKET

## Super Deal of this Week

### till April 14th

LOWEST PRICE LB 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Small Onion

LOWEST PRICE LB 1.49$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Blue Fish

LOWEST PRICE 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET




ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 5.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சுறா fish

## இந்த வாரம் Gunaam's super market தரும் Super Deal

| | | |
|---|---|---|
| Harischandra Pappadam | - | $1.00 |
| MR.Goudas Table Salt | - | $1.00 |
| MR.Goudas Sea Salt | - | $1.49 |
| Blue Sea Tin Fish | - | $1.99 |
| Baba Uppuma mix | - | $2.99 |
| Chocolate Swiss Roll | - | $3.99 |
| 200g Tamarind 5for | - | $5.00 |
| Nestum Seriyal | - | $5.99 |
| Kott mee Noodles 6for | - | $5.99 |
| Raigam Noodles 2for | - | $5.00 |
| 7lb Brown Sugar | - | $8.99 |
| 3lt MR.Goudas Sunflower oil | - | $8.99 |
| Maharaja Rice Flour | - | $8.99 |
| Niru அவித்த மா | - | $8.99 |
| AROY–D Coconut Milk Tin 4for | - | $10.00 |
| MR.Goudas Coconut Milk Powder 3for | - | $10.00 |
| Niru Tin Fish 4for | - | $10.00 |
| 900g maggi Coconut Powder | - | $11.99 |
| Maharaja Curry Powder | - | 11.99 |

| | | |
|---|---|---|
| Maharaja Basmati Rice | - | $13.99 |
| EggPlant | - | $1.491b |
| Drumstick | - | $4.991b |
| Small Onion | - | 4.991b |
| Rasavalli | - | $5.991b |
| Karunayam | - | $4.991b |
| Super deal gift mysoor Daal | - | $1.00 |

### Fish Market Special Sale

| | | |
|---|---|---|
| ஊர்க்கோழி | - | $6.99 |
| Ceylon விளைமீன் | - | $7.991b |
| Blue fish | - | $3.991b |
| இறால் | - | $3.991b |
| சுறா Fish | - | $5.991b |
| திரளி | - | $5.991b |
| Ceylon பாரை | - | $8.991b |
| Ceylon காரள் | - | $7.991b |
| KO King fish | - | $7.991b |
| KO Salmon fish | - | $7.991b |
| Sea Breem fish | - | $7.991b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# 763 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை மொன்றியல் நகரில் கட்டமைக்க ஏற்பாடு

வீடு தட்டுப்பாட்டைக் குறைக்கும் வகையில், கனடாவின் கியூபெக் மாகாணத்திலுள்ள மொன்றியல் நகரில் 763 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக, நேற்று, கனேடிய பெடரல், மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

சுமார் 310 மில்லியன் டொலர் செலவில், 12 திட்டங்களாக குடும்பங்கள், மூத்த குடிமக்கள், தனிமையில் வாழ்வோர் மற்றும் வீடற்ற இளைஞர்களுக்காக நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.



ஒரு காலத்தில், நல்ல வாடகைக்கு வீடுகள் கிடைக்கும் நகரம் எனப் பெயர் பெற்ற மொன்றியலில் இப்போது வீடு பற்றாக்குறை காணப்படுகிறது. ஆகவே, வீடு பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த இந்த திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், இதுவரை, குறிப்பிட்ட காலத்துக்குள் வீடுகளைக் கட்ட வரையறை கொடுக்கப்படாத நிலையில், இம்முறை 12 மாதங்களுக்குள் இத்திட்டம் கையெழுத்தாகவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால், சுமார் மூன்று ஆண்டுகளுக்குள் மக்கள் வாழ வீடுகள் தயாராகிவிடும் என்ற நிச்சயத்தன்மை உருவாகியுள்ளது என்கிறார் கியூபெக் மாகாண வீட்டு வசதித்துறை அமைச்சரான France-Élaine Duranceau.

# இஸ்ரேலுக்கான விமான சேவை; இரத்துச் செய்தது எயார் கனடா!

இஸ்ரேலுக்கான விமான சேவையை இரத்துச் செய்வதாக எயார் கனடா விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

றொறன்ரோவிலிருந்து டெல் அவீவிற்கு பயணம் செய்யவிருந்த விமானம் இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளது.

பிராந்திய வலயத்தில் நிலவி வரும் பதற்ற நிலையைக் கருத்திற் கொண்டு எயார் கனடா நிறுவனம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எயார் கனடா விமானம் உள்ளூர் நேரப்படி சனிக்கிழமை பிற்பகல் 4.25 மணிக்கு பியர்சன் விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்தது.

எனினும் அரசாங்கத்தின் பாதுகாப்பு நடைமுறைகளின் அடிப்படையில் விமான சேவையை ரத்து செய்ததாக நிறுவனம் அறிவித்துள்ளது.

பிராந்திய வலயத்தின் நிலைமைகளை கருத்திற் கொண்டு விமானப் பயணங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட உள்ளதாக எயார் கனடா விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.




இஸ்ரேலின் மீது, ஈரானிய படையினர் கடுமையான ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் எயார் கனடா நிறுவனம் விமானப் பயணங்களை ரத்துச் செய்துள்ளது.

